திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி கட்டிடங்களை 'டீ-சென்ட்ரலைசேஷன் பிளான்'-ல்தான் கட்ட முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இங்கே வழங்கப்படுகின்ற பட்ஜெட்டிலே நான்கில் ஒரு பங்கை கல்வித் துறைக்கு ஒதுக்கி இருக்கின்ற காரணத்தினால், இவ்வளவு பெரும் தொகையைச் செலவு செய்து நாட்டிலே கல்வி அறிவை வளர்க்கின்ற ஒரு நல்ல திட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே இந்தக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு தனியாக ஒரு என்ஜினியரிங் செக்ஷன் ஆரம்பிக்கப்படுமா; அவர்களிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கில் ஒரு பங்கு வரவு-செலவுத் திட்டத்திலே கல்விக்காக ஒதுக்கப்பட்டாலும்கூட அதிலே 90 விழுக்காடு ஊதியத்திற்காகவே செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதி தொகையிலே தான் கட்டிடங்கள் கட்டுகின்ற பணி நடைபெறமுடியும்; சீரமைக்கின்ற பணி நடைபெற முடியும். இதற்கென்று தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 534, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

534—

திருவள்ளூரில் அரசு கலைக்கல்லூரி துவக்குதல்

*33658—திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகரத்தில் புதியதாக அரசு கலைக்கல்லூரி ஒன்று துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.

1995 மே 3]

திருமதி டி. சக்குபாய் தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய இளைய தலைமுறை தான் எதிர் காலத்தில் சிறப்பான சமுதாயத்தை உருவாக்கும் தலைவர்கள் என்பதை நன்கு உணர்ந்து நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கண் போன்று அதிமுக்கியத்துவம் கொடுத்து வழிநடத்தி வரும் இவ்வேளையில் என் தொகுதியில் 18-க்கும் மேற்பட்ட மேல்நிலைப்பள்ளிகளின் மாணவர்கள் பட்டப் படிப்பு படிக்க 45 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள சென்னை சென்று பட்டப்படிப்பு படிக்க வேண்டியுள்ளது. இதனால் ஏழை கிராமத்து மாணவர்கள் கல்லூரியில் சேர்ந்து படிக்க இயலவில்லை. எனவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்லாமல் இந்த ஆண்டிலோ அல்லது அடுத்த ஆண்டிலாவது புதிதாக ஒரு கல்லூரி ஏற்படுத்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் அரசு கல்லூரிகள் மூன்றும், அரசு உதவி பெறும் தனியார் கல்லூரிகள் ஒன்பதும், சுயநிதிக் கல்லூரிகள் ஒன்பதும் ஆக 21 கல்லூரிகள் தற்போது இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டு இருக்கிற திருவள்ளூருக்கு அருகாமையிலேயே பட்டாபிராமில் பி.ஆர்.பி.சி.சி. இந்துக் கல்லூரி—அது ஒரு அரசு உதவி பெறும் கல்லூரி, மற்றும் திருநின்றவூரில் ஜெயா கலை மற்றும் அறிவியல் கல்லூரி—அது ஒரு சுயநிதிக் கல்லூரி, ஆக இரண்டு கல்லூரிகள் இயங்கி வருகின்றன. அரசின் நிதி நெருக்கடி காரணமாகத்தான் புதிய கல்லூரிகளை அரசு தொடங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப் போல ஒவ்வொரு தொகுதியிலும் ஒரு அரசு கல்லூரி தொடங்குவது என்பது இயலாத சூழ்நிலை; அரசின் நிதி அதற்கு இடம் தரவில்லை. இருப்பினும், தனியார் கல்வி முகமைகள் ஏதும் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு விண்ணப்பித்தால், அதற்கு வாய்ப்பு இருக்கிறது; விதிமுறைகளின்படி தேவையின் அடிப்படையில் அரசு அதைப் பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 535, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை. அவருக்குப்பதிலாக திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.